பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தொடங்கியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 25 (10—11—72) வெள்ளி   வெளியூர்: ஐப்பசி 26 (11—11—72) சனி [இதழ்: 122

அசாம்மொழி கிளர்ச்சி இதுவரை 15,000 பேர் கைது

கௌஹாத்தி, அக். 9—

அசாம் பள்ளத்தாக்கு மாவட்டங்களில் மாணவர் மொழிக் கிளர்ச்சி தொடர்பாகக் கிடைத்துள்ள செய்திகள்படி குறைந்தது 15 000 பேர்களாவது கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கட்சி சரியாக உருவாவதற்கு முன்பாகவே போராட்டமா?

[✱]

அண்ணா காட்டிய நிதானம் எங்கே— புதுக் கட்சித் தலைவர் போக்கு எங்கே?

பொதுச்செயலாளர் நாவலர் இடித்துரை

சென்னை, நவ. 10—

'புதிய கட்சியைத் தொடங்கினார்கள்; சரியான நிறுவன அமைப்பு உருவாகவில்லை — கொள்கை வகுக்கப்படவில்லை — உறுப்பினர்கள் சேர்ந்தபாடில்லை; இந்த ஒழுங்கில், கட்சி தொடங்கிய பதினைந்தாம் நாளே போராட்டம் நடத்துகிறார்களாம்!

"தி. மு. கழகம் தொடங்கி நான்கு ஆண்டுகள் ஆன பிறகுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் போராட்டம் நடத்தினார் — கழகத் தோழர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்; அப்படிப்பட்ட அந்த நிதானம்தான், தி. மு. கழகம் இன்று இந்த அளவுக்கு வளரக் காரணமாக இருந்தது!

"1885-ல் தொடங்கப்பட்ட காங்கிரசுக் கட்சியில்கூடச் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் போராட்டத் திட்டமே உருவாயிற்று"

—என்று பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை 116-வது வட்டத்தில் நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் விளக்கினார்; அவர் மேலும் பேசியதாவது:—

மக்களை மதிக்கின்றவர் இலட்சணமா இது!

"சுட்டு விரலை நீட்டி எதிரே இருப்பவர்கள் மேல் குற்றஞ் சாட்டும்போது, மற்ற மூன்று விரல்களும் நம் மீதே குற்றம் சாட்டுவதை நீ உணர வேண்டும்" என்று சீனப் பழமொழி ஒன்று உண்டு.

அதேபோல், ஏகப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு உரியவராக இருக்கும் எம்.ஜி.ஆர். — சட்டமன்றத்தில் எல்லோரும் கணக்குவைக்க வேண்டுமென்பதைச் சட்டமாக்கி — நாங்களெல்லாம் தவறாமல் ஆண்டுதோறும் வைத்துக்கொண்டு வந்தும், கடந்த மூன்றாண்டுக் காலமாகக் கணக்கு வைக்காத எம்.ஜி.ஆர். — நம் மீது குற்றஞ் சாட்டுகிறார்!

'பொதுக்குழுவில் கணக்கு கேட்டேன் — வைக்காவிட்டால் மக்கள் மன்றத்தில் சொல்வேன்' என்றார்; ஆனால், 'மக்களை நான் மதிக்கிறேன்' என்று சொல்லிக் கொள்கிறவர் நேரே குடியரசுத் தலைவரிடம் போய் இந்த அரசுமீதான புகார்கள் அடங்கிய 'மர்மப் பெட்டி'யைத் தந்துவிட்டு வந்திருக்கிறார்! என்ன மர்மமோ! மக்களை மதிக்கிறவர் இலட்சணமா இது!

சட்டம் தெரியாத கட்சித் தலைவர்

'ஒரு மாநில அரசின் அமைச்சர்கள்மீது மத்திய அரசு கமிஷன் அமைத்து விசாரணை செய்யலாம்' என்று அரசியல் சட்டத்திலேயே இடமில்லை; எங்களிடமும் சட்ட நுணுக்கம் தெரிந்த வழக்கறிஞர்கள் பலர் இருக்கிறார்கள்.

எந்தப் புகார் ஆனாலும் கவர்னரிடம் தந்தால் — அது முதல் வரிடம்தான் வரும்; குடியரசுத் தலைவரிடம் தந்தாலும் — தலைமையமைச்சர் மூலம் அது இங்கே முதலமைச்சர் கலைஞரிடம்தான் வரும்; இதுகூடத் தெரியாத அவர் ஒரு கட்சித் தலைவராம்!

நிரூபிக்க வக்கில்லை— விலகுங்கள் எனக் கூறுவதா?

'நீதி விசாரணை கோரப்பட்டு விட்டது — நீங்கள் கீழே இறங்குங்கள்' என்கிறார் நம்மைப் பார்த்து! விசாரணை கோரிய சாலேயே ஆட்சியை விட்டுக் கீழே இறங்கிவிட வேண்டுமெனறால், ஒரு மாநிலத்திலும் ஆட்சி நிற்காதே! மத்திய அரசில் இந்திரா காந்திகூட இருக்க மாட்டாரே!

'நான் குற்றம் சுமத்தி விட்டேன்; நீங்கள் கீழே இறங்குங்கள் என்றால்' என்ன அர்த்தம்? 'கலைஞர் இன்ன தவறைச் செய்தார் — அமைச்சர்கள் இன்ன தவறைச் செய்தார்கள்' என்று கூறு — நிரூபிக்கப்பட்டு — பின்னர் சிறையில் தள்ளு; அதை விட்டுவிட்டு, இன்னார் இன்ன குற்றம் செய்தார்' என்று நிரூபிக்க வக்கில்லாமல் 'விலகுங்கள் என்பதா?

நீதி விசாரணை தானே வரும்

குற்றஞ்சாட்டினால், குற்றச் சாட்டு என்ன என்பதைக் கூறவேண்டாமா? 'நீதி விசாரணை வேண்டும்'என்று சொல்லிக்கொண்டே இருந்தால் எப்படி? இவர்கள் இன்ன குற்றம் செய்தார்கள்' என்று பேசு அல்லது எழுது; நாங்கள் உன்னை நீதிமன்றத்திற்கு அழைக்கிறோம்; நீதி விசாரணை தானே வரும்!

கீழ்க்கரையில் ஒரு தனியார் பாடசாலை நடத்த அனுமதி வழங்கியதற்காகப் பல இலட்சம் ரூபாய் பெறும் வைர நெக்லசை நான் இலஞ்சமாகப் பெற்றேன் என்று 'ஜனசக்தி'யில், முருகானந்தம் எம்.பி. எழுதியிருந்தார்; அந்தப் பத்திரிகையின் பதிப்பாசிரியர் யாரென்று பார்த்தேன் — கல்யாணசுந்தரம்; அந்த இரண்டு எம்.பி.-க்களும் என் மீது பொய்க் குற்றம் சுமத்தியிருப்பதாக நான் வழக்குத் தொடுத்திருக்கிறேன்; தைரியமிருந்[illegible]ப்படி நீயும் எழுதேன்— நீ[illegible]சாரணை தானாகவே வரும்!

அழகைப் பார்த்து வருகிறவர்கள் ரசிகர்கள்; அழகு இருக்கின்றவரயில்தான் அவர்கள் இருப்பார்கள்; அப்படிப்பட்டவர்களை நம்பித்தான் அவர், கட்சியைத் தொடங்கியிருக்கிறார்.

எனக்காகவும் — கலைஞருக்காகவும் கூட்டம் வருகிறது என்றால், அழகுக்காக அல்ல-கருத்திற்காக.

முகத்தைப் பார்த்து வந்த ரசிகர்களை நம்பி எம். ஜி. ஆர். கட்சி தொடங்கியிருக்கிறார்!

கொள்கையைச் சொல்லத் தெரியாத 'கோமாளி'யாவதா?

டில்லிக்குப் போயிருந்த அவரிடம் 'உங்கள் கட்சியின் கொள்கை என்ன' என்று கேட்டிருக்கிறார்கள்; 'அண்ணாவின் கொள்கைதான்' என்று சொல்லியிருக்கிறார்; 'அதுதான் என்ன' என்று

(4-ம் பக்கம் பார்க்க)

'வாத்தியார்' காலை வாரி விடுகிறார் சுதந்தரா கட்சிப் பொதுச்செயலாளர்

'அவர் முறை அண்ணாவின் கொள்கைக்கே முரணானது'

'மாநில அரசை அகற்ற மத்திய அரசின் உதவி நாடுவது முறையற்றது'

சென்னை, நவ. 10—

"எம். ஜி. ஆரின் கட்சி கையாளும் முறை, அண்ணாவின் கொள்கைகளுக்கே முரணானது என்று நாங்கள் கருதுகிறோம்.

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று அ[illegible]ணா கோரினார்; ஆனால் இந்த அரசையோ அல்லது எந்த மாநில அரசைய[illegible] அகற்றக் குடியரசுத் தலைவரிடம் மகஜர் கொடுப்பதையோ அல்லது மத்திய அரசின் உதவியை நாடுவதையோ சுதந்தராக் கட்சி ஆதரிக்காது."

—டாக்டர் எச். வி. ஹண்டே

இரவில் பேசியது:

காமராசர் பற்றி புரட்சி நடிகர்

சென்னை, நவ. 10—

"நான் நாடகமாடுகிறேனாம்: இப்போதுதான் — நான்கு வாரம் கழித்துத்தான் காமராசர் இதனைக் கண்டுபிடித்திருக்கிறார்!

"இத்தனைப் பேர் செத்த பிறகுதான் — அவருக்கு நேற்றுத்தான் — முந்தாநாள்தான் தெரிந்திருக்கிறது — 'நான் நாடகமாடுகிறேன்' என்று!

"நான் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டவுடன் — அ. தி. மு. க. ஆரம்பிக்கப்பட்டவுடன் — இதைச் சொல்லியிருக்க வேண்டாமா?

"காமராசர், தம் பாதையில் தவறிழைத்துவிட்டார்! இப்போது அவர்தான் நாடகமாடுகிறார்!

"காலதாமதமானாலும், கணக்காக — கணக்குக் கேட்கிறேனே — அதற்காகவாவது என்னைப் பாராட்டுவார் என எதிர்பார்த்தேன்; ஆனால், அப்படிச் செய்யவில்லை அவர்!"

—நேற்று இரவில் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆவடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியது; ('நவசக்தி' 10—11—72)

பகலில் பேசியது:

"பெருந் தலைவர் காமராசர் பிறந்த தின விழா ஒன்றில் அவரின் சிறப்புக்களைப் புகழ்ந்து பாராட்டிப் பேசியது இன்னும் நிலைத்து நிற்கிறது; யாரும் அதை மறந்திருக்க மாட்டார்கள்.

"கட்சி மீது அவருக்குள்ள பற்று—தியாக உணர்வு போன்றவற்றை, ஒவ்வொரு கட்சிக்காரனும் முன்மாதிரியாகக் கொண்டு—பின்பற்றி நடக்க வேண்டிய ஒன்று—என்று அன்று நான் கூறியதை இன்னும் வலியுறுத்த விரும்புகிறேன்."

—செய்தியாளர்களிடம்

குற்றச்சாட்டுக்களை மக்கள் முன் வைக்காததேன்?

நிரூபிக்க நீதிமன்றத்துக்கு அழைப்போம் என்ற அச்சமா?

காட்டிக் கொடுத்துக் கழகத்தை அழிக்கும் முயற்சி பலிக்காது

புதுக் கட்சிப் 'போதை'யில் இருக்கும் ஆணவக்காரர்களுக்கு அமைச்சர் செ. மாதவன் அறைகூவல்

சென்னை, நவ, 10—

"உங்கள் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால் தைரியமாக மக்கள் மத்தியில் வையுங்கள்!

"உங்கள் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவேண்டுமானால் 'நீதிமன்றத்திற்கு வாருங்கள்' என்று உங்களை அழைப்போம்; புரட்சித் தலைவரே — தயாரா?"

என்று, அமைச்சர் செ. மாதவன் அவர்கள் அறைகூவல் விடுத்தார்; பெரம்பூரில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"இந்தியத் துணைக்கண்டத்தின் எந்தப் பகுதியிலும் காங்கிரசை எதிர்த்து ஒரு தனிக் கட்சி போட்டியிட்டு வென்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்து மக்களுக்குப் பாடுபட்டது — என்ற வரலாற்றை நிரந்தரமாக இந்தியச் சரித்திரம் காணவில்லை!

அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம்தான், இந்தியத் துணைக்கண்டத்திலேயே எவரும் வியப்படையும் வண்ணம் தனி ஒரு இயக்கமாகக் காங்கிரசுக் கட்சியை எதிர்த்து ஒரு மாபெரும் அரசை நடத்திக் காட்டியது; கொள்கைகள் வகுத்துச் செயலாற்றியது; 'சிறப்பான திட்டங்களை நிறைவேற்றிட முடியும்' என்பதை நிரூபித்துக் காட்டியது!

'ஆளத் தெரியாதவர்கள் — ஒன்றுக்கும் உதவாதவர்கள் — மேடைப் பேச்சாளர்கள் — நாடகமாடிகள்' என்ற இத்தனை வசவுகளையும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து நம்மீது சுமத்திய வரலாறு தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக உண்டு.

இன்றைக்கு அதையெல்லாம் மாற்றியமைத்து — இந்தியத் துணைக்கண்டத்திலுள்ளவர்கள் பலர் பார்த்தும் பொறாமைப்படத்தக்க அளவுக்கு இந்த ஐந்தாண்டுக்காலத்தில் பல அரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஐந்தாண்டுகளுக்குள் ரூ. 547 கோடி அளவில் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றித் தந்தோம்.

தமிழ்நாட்டிலே எந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறதோ அதை, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ளவர்கள் பாராட்டி வரவேற்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஒழிக்க விரும்புகிறவர்கள் இதனையெல்லாம் உணர்ந்து படிப்பினை பெற வேண்டும்; இன்றைக்கு எதிர்ப்பவர்களானாலும் சரி — எதிர்த்து எதிர்த்து அழிந்தவர்களானாலும் சரி — அவர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டிய படிப்பினையாகும்.

டெல்லியிலே இருந்து தமிழ்நாட்டு அரசைப் பார்த்து, 'ஓர்இலட்சம் டன் உணவு தாருங்கள்' என்று கேட்கின்ற வரலாற்றைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாண்டுக் காலத்திலே உருவாக்கியிருக்கிறது!

இப்படி ஒவ்வொரு துறையிலும் செயலாற்றியுள்ள இந்த அரசைத்தான் அழித்துவிட விரும்புகின்றனர்.

எந்தக் காரணங்களைச் சொல்லி அவர்கள் நம்மை அழிக்க விரும்புகின்றனர் — கொள்கையைச் சொல்லியா — நம்மிடத்திலே உள்ள தவறுகளை சுட்டிக் காட்டியா — அல்லவே!

எங்களுடைய கொள்கை இது — திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையில் இன்னின்ன தவறுகள் இருக்கின்றன — என்று சொல்ல முடிகிறதா? 'இந்த அரசு ஏதையும் செய்யவில்லை' என்று வாதாட முடிகிறதா? அவர்களால் அப்படி ஏதும் சொல்ல இயலவில்லையே!

அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள் — 'கழக அரசு பல நன்மைகளைச் செய்திருக்கிறது' என்று; என்றாலும், 'கழக ஆட்சியை ஒழித்துக் கட்டுவதுதான் எங்களுடைய கொள்கை' என்று பிதற்றித் திரிகின்றனர்!

புதிதாகக் கட்சி தொடங்கியவுடன் ஒரு போதை ஏற்படுகிறது — ஒரு வேகம் ஏற்படுகிறது; அந்த வேகத்திலே, 'எதையும் பேசலாம்' என்ற ஆணவம் ஏற்படுகிறது.

'ஆணவம் — எத்தனையோ கட்சித் தலைவர்களை அழித்து இருக்கிறது' என்ற வரலாற்றைப் படித்திருந்தும், அதனை மறந்துவிட்ட காரணத்தாலே, 'திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்து விடலாம்' என்று வெகு எளிதாகக் கருதுகின்றனர்!

அப்படிக் கருதுகின்றவர்கள், தங்களுடைய கொள்கையைக் கோர்வையாக — ஒழுங்காகச் சொல்ல முடிகின்றதா என்றால், இல்லையே!

முன்பு இந்தக் கட்சியை — இந்த அரசைத் தாக்க முனைந்தவர்களெல்லாம் எதையெதைக் காரணமாகச் சொன்னார்களோ — அவற்றைத்தான் இன்றைக்குப் புதிய கட்சி தொடங்கியிருப்பவர்களும் சொல்லத் தொடங்கியுள்ளனர்!

ஐந்தாண்டுக் காலமாகக் காமராசர் எதையெதைச் சொன்னாரோ — அவற்றைத்தான் இன்றைக்கு இவர்களும் சொல்கிறார்கள்!

'இந்த ஆட்சி கொடுமை செய்கிறது' என்று புதுக் கட்சி ஸ்தாபகர் முகாரி பாடுகிறார்!

'இந்தக் கட்சியைப் புனிதப்படுத்தப் போகிறேன்' என்றார் முதலில்; ஏசுநாதர் அல்லவா — ஒரு நாள் அந்தப் படம் பத்திரிகையிலே வந்ததல்லவா? அதனால், 'கட்சியைப் புனிதப்படுத்தப் போகிறேன்' என்கிறார்!

எதிர்க் கட்சிக்காரர்கள் எதையெதையோ சொன்னார்கள்!

'ஊழல்' என்று இன்றைக்குத்தானா காமராசரும் — இராஜாஜியும் சொன்னார்கள் — இலட்சக்கணக்கான மக்களைக் கடற்கரையிலே கூட்டி வைத்துக்கொண்டு தான் அப்படிச் சொன்னார்கள்; புரட்சித் தலைவரே—அன்றைக்கு நீங்கள் அதனை எதிர்க்கவில்லையா?

'புரட்சித் தலைவ'ருக்குச் சொல்லிக் கொள்வேன் — 'ஏமாந்துவிடாதீர்; ஆத்திரத்திலே அறிவை இழந்துவிடாதீர்; யாரோ சொன்னார்கள் — எதையோ சொன்னார்கள் என்பதற்காகச் சந்தேகப்படாதீர்கள்' என்று!"

புதுடில்லியில் தமிழ்ப் பண்பாட்டுக் கண்காட்சி

புதுடில்லி, நவ. 8—

இங்குள்ள திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்த் துறையினர் தமிழ்க் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்; சங்க காலம் — இரட்டைக் காப்பிய காலம் — கேரரசுக் காலம் — தற்காலம் என்னும் நான்கு பிரிவுகளாக அமைந்த இந்தக் கண்காட்சி அக்டோபர் 20, 21, 22 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது; ஓவியங்கள்—விவரண அட்டைகள் — மாதிரி (மாடல்)கள் — புத்தகங்கள் என்னும் நான்கு துணைக் கருவிகள் கொண்டு இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ் வரலாற்றில் கி. பி. 2-ம் நூற்றாண்டு வரை மதச் சார்பற்ற நாகரிகமும், உலகாயத வாழ்வும் செழித்தன; கி. பி. 600 வரை கலைகள் — வாணிபம் — ஆட்சி இயல் ஆகியவற்றில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டதோடு, சமய நெறியும் தமிழில் ஊடுருவியது; அதன்பிறகு, கி.பி. 1,800 வரை எல்லாவற்றிலும் மதமே முதன்மை பெற்றது; கோயில்கள் — புராணச் சிற்பங்கள் — பக்தியை அடிப்படையாகக் கொண்ட கலை இலக்கியம் இவைகளே இந்தக் காலக் கட்டத்தின் நடைமுறை; ஐரோப்பியர் வருகைக்குப் பின் இங்கே எல்லாவற்றிலுமே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

மிகப் பழைய காலத்துக் காதல் — வீரம் — உலகாயுதம் என்பவைகளை விளக்கித் தொடங்கிய கண்காட்சி, இக்காலத்தின் அறிவியல் — தொழிலியல் வளர்ச்சிகளைச் சுட்டிக்காட்டி முற்றுப்பெற்றது.

இக்காலத்தின் பெரியோர்களாகிய வ. உ. சி., பெரியார், பாரதி, திரு. வி. க., அறிஞர் அண்ணா, இராசகோபாலாச்சாரி, மறைமலை அடிகள், உ. வே. சாமிநாதையர், புதுமைப்பித்தன், சி. வி. இராமன், காமராசர் முதலியவர்களின் படங்களை வரிசையாக வைத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு பகுதியிலும் அந்தந்தக் காலத்தின் இலக்கியங்கள் இடம் பெற்றிருந்தன; ஐந்து வகை நிலப்பரப்புக்கள்—காவிரிப்பூம் பட்டினம்—மதுரை—சென்னை ஆகியவற்றின் மாதிரி (மாடல்)களை அமைத்திருந்தனர்; பொங்கல் விழாவும் வேறு சில தமிழர் பழக்கவழக்கங்களும் காட்சியில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தன.

இந்த 3,000ஆண்டு வரலாற்றை உள்ளவாறு விளக்குவதாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது; சில பி.ஏ. வகுப்பு மாணவர்களின் துணையுடன் தமிழ்ப் பேராசிரியை திருமதி சாலினி இளந்திரையன் அவர்கள் இதைச் சிறப்பாக அமைத்திருந்தார்.

காசநோய்த் தடுப்பு

15.53 கோடிபேருக்குஊசி

புதுடில்லி, நவ 8—

சென்ற ஆகஸ்டு மாதத்தில் இந்தியாவில் மொத்தம் 5 59,248 பேருக்குக் காசநோய்த் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

பல்வேறு மாநிலங்களிலும் — மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் 276 குழுக்கள் காசநோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன; இந்தக் குழுவினர், வீடு வீடாகச் சென்று தடுப்பு ஊசி குத்தி வருகிறார்கள்.

பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போடப்படுகிறது; மகப்பேறு விடுதிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு உடனடியாகக் காசநோய் தடுப்பு ஊசி போடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய்த் தடுப்பு ஊசி போடும் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

நமது நாட்டில் ஆகஸ்ட் 1972 வரையில் மொத்தம் 15 53 கோடி பேருக்குக் காசநோய்த் தடுப்பு ஊசி குத்தப்பட்டிருக்கிறது.

திருப்பதிகோவிலுக்குக் கிடைத்த வருமானம்

திருப்பதி, நவ. 8—

திருப்பதி கோவிலின் அக்டோபர் மாத வருமானம் ரூ. 35 இலட்சம் எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

உண்டியலில் கிடைத்த ரூ 24,89,939; டிக்கெட்டு தரிசனத்தின் மூலம் கிடைத்தது ரூ. 4,32,274; லட்டு — வடை — பிரசாதம் விற்பனையின் மூலம் கிடைத்த ரூ. 5,98,474.

நகராட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை

மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரிக்கப்படுகிறது

திருச்சி, நவ. 8—

1971-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாட்டில் பல்வேறு நகராட்சிகளிலும் இடங்கள் எண்ணிக்கையைத் தமிழ் நாடு அரசு உயர்த்தியிருக்கிறது; இதன் காரணமாக 1974-ம் ஆண்டில் நடக்கும் நகராட்சித் தேர்தல்களில் நகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுதலாகும்.

கோவை — சேலம் — திருச்சி ஆகிய சிறப்புப் பிரிவு நகராட்சிகளில் மொத்த இடங்கள் 40-ஆக உள்ளன; இந்த எண்ணிக்கை அடுத்த நகராட்சித் தேர்தலின் போது 44-ஆகக் கூடும்.

அடுத்த நகராட்சித் தேர்தல் தேதியிலிருந்து நகராட்சிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு இருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது; மொத்த இடங்களின் எண்ணிக்கை அடைப்புக் குறியில் கொடுக்கப்படுகிறது.

செங்கற்பட்டு மாவட்டம்:— ஆலந்தூர் (32); செங்கற்பட்டு (24); காஞ்சிபுரம் (32); தாம்பரம் (32); திருவள்ளூர் (20); திருவொற்றியூர் (32)

வடாற்காடு மாவட்டம்:— ஆம்பூர் (32); ஆற்காடு (24); அரக்கோணம் (28); ஆரணி (24); குடியாத்தம் (32); இராணிப்பேட்டை (20); திருப்பத்தூர் (28); திருவண்ணாமலை (32) வாணியம்பாடி (32); [illegible]லூர் (36); வாலாஜாபேட்டை (16)

தென்னாற்காடு மாவட்டம்:—சிதம்பரம் (28); கடலூர் (36); நெல்லிக்குப்பம் (24); பண்ருட்டி (24); திண்டிவனம் (28); விழுப்புரம் (32).

தர்மபுரி மாவட்டம்:—தர்மபுரி (28); கிருஷ்ணகிரி (24).

தமிழ்நாட்டில் 92 நகராட்சிகள் உள்ளன; பல்லாவரம், மதுராந்தகம் (செங்கற்பட்டு மாவட்டம்)—துறையூர், பொன்மலை (திருச்சி மாவட்டம்)—விருத்தாசலம் (தென்ஆற்காடு மாவட்டம்)...நாமக்கல் (சேலம் மாவட்டம்) — சாத்தூர் (இராமநாதபுர மாவட்டம்)—சீர்காழி (தஞ்சை மாவட்டம்)—சத்தியமங்கலம் (கோவை மாவட்டம்) ஆகியவை புதிதாக ஏற்படுத்தப்பட்டவை! இவை தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் இருப்பவை; இந்நகராட்சிகளில் மொத்த இடங்கள் பற்றி இனிமேல் தீர்மானிக்கப்பட வேண்டும்.

போராட்டப் பூச்சாண்டி காட்ட வேண்டாம்

"சாதாரண மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தி. மு. க. அரசு தவறினால் இந்த அரசு இராஜினாமா செய்ய வேண்டும் என்று தாம் கேட்கப் போவதாகவும், அதற்காகப் புதிய போராட்டம் நடத்தப்படும் என்றும் திருவத்திபுரத்தில் காமராஜ் குறிப்பிட்டார்."

—செய்தி

புதிய போராட்டம் இருக்கட்டும் — பழைய போராட்ட அறிவிப்புகளெல்லாம் என்ன ஆயின?

ஊழல் ஒழிப்புக்காக ஒரு போராட்டம் நடத்தப்போவதாகக் கூறி ஜில்லா ஜில்லா'வாகத் திக்விஜயம் கிளம்பினீரே — என்ன ஆயிற்று?

விவசாயிகள் போராட்டத்திலேயே இந்த ஆட்சி வீழ்ந்துவிடும் என்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தீரே — என்ன ஆயிற்று?

கடந்த ஆறு ஆண்டுகளாகத்தான் நீர், 'போராட்டம் — போராட்டம்' என்று 'பூச்சாண்டி' காட்டி வருகிறீர்; எத்தனையோ போராட்டங்களைப் பின்னால் இருந்துகொண்டு தூண்டிவிட்டும் பார்த்தீர்; மக்கள் உமது பக்கம்தான் என்றால் கழக அரசு எப்போதோ கவிழ்ந்திருக்குமே!

இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சுவது அல்ல கழகம்!

மக்களின் அத்தியாவசியத் தேவை என்ன என்பதையும் அவற்றை எப்படி நிறைவேற்றுவது என்பதையும் அறிந்துதான் கழக அரசு, கலைஞரின் தலைமையில் திட்டங்களைத் தீட்டி நாட்டில் செயல்படுத்தி வருகிறது; மக்களும் அதனைக் கண்கூடாகக் கண்டுவருகின்றனர்!

உமக்கு ஆண்மை இருந்தால் – தமிழ்மக்கள் நலனில் உண்மையான அக்கறை இருந்தால், தமிழ்நாட்டுத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையிட்டுவரும் டில்லி அரசுக்கு எதிராகப் போராட்டப் பூச்சாண்டியைக் காட்டிப் பாரும்!

அரசியல் ஒற்றுமை நிலைக்க மாநில சுயாட்சி தேவை

'அந்நியரால் ஆளப்படுகிறோம்' என்ற உணர்வை நீக்க வேண்டும்

முன்னாள் தலைமை நீதிபதி இதயதுல்லா வற்புறுத்தல்

ஐதராபாத் நவ 6

மத்திய அரசில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட்டு மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும், மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவையாக மாநில அரசுகள் விளங்க வேண்டுமானால் மாநில அரசுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தேவை என்றும், மத்தியில் வலுவான ஆட்சி இருக்க வேண்டும் என்றாலும் மாநிலத்துக்குச் சுயாட்சி தேவை என்றும் இந்தியத் தலைமை நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. இதயதுல்லா கருத்தறிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நாகரசு நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்திய அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:—

"மத்திய அரசின் அதிகாரங்களைக் குறைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும்.

தவிர, மத்திய அரசு — மாநில அரசு இரண்டும் சட்டங்களை இயற்றலாம் என்று கூறுகின்ற பொதுப் பட்டியலில் உள்ள பல அதிகாரங்களையும் மாநில அரசுகளுக்கு அளிக்க வேண்டும்.

மாநிலங்கள் நாட்டின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அவற்றுக்கு அதிக நிதி வசதிகளைத் தருவதற்கு இவ்விதம் அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

இவ்வித மாறுதல்களையும் மற்றும் சில மாறுதல்களையும் செய்வதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான், மத்திய அரசுக்கும் — மாநிலங்களுக்கும் இடையே நம்பிக்கைச் சூழ்நிலை ஏற்படும்; மத்திய அரசுக்கும் — மாநிலங்களுக்கும் இடையே மேலும் நல்ல உறவுகள் நிலவும்.

மாநில அரசுகள் மக்களுக்காகப் பாடுபடுபவை என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும்; தங்கள் மீது அவ்வித நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளதாக மாநிலங்களுக்கு உணர்வு இருக்குமானால், அவை நிச்சயம் சரியான பாதையில் செல்லும் என்று நம்புகிறேன்.

அரசியல் ஒற்றுமையைக் காக்க நாம் தீவிரமாகப் பாடுபடுகின்ற அதேநேரத்தில், சில துறைகளில் குறிப்பாகச் சட்டம் இயற்றுதல் — நிதித்துறை ஆகியவற்றில் அதிக அளவில் சுயாட்சி அளிக்க வேண்டும்.

அந்நியரால் ஆளப்படுவது போன்ற உணர்வு மாநிலங்களுக்கு இல்லாதபடி செய்து, அதேநேரத்தில் அவற்றைத் தன்னிறைவும்—சுயபலமும் பெற்றதாக்கி, எல்லா மக்களுக்குமான சமநிலை மத்திய அரசு இருக்கும்படி செய்வதே நமது நோக்கமாக இருக்கவேண்டும்.

எந்த அளவு வரையில் செயல்படுவது என்பதில், மத்திய — மாநில அரசுகளுக்கிடையே தெளிவான உடன்பாடு இருக்க வேண்டும்; குறிப்பாக மத்திய அரசின் தலையீடின்றி மாநிலங்கள் செயல்படுவதில் இவ்வித உடன்பாடு தேவை.

இந்தியாவின் ஒற்றுமை காக்கப்பட வேண்டும்; அரசியல் அதிகாரம் முழுவதும் மையத்தில் இருக்கவேண்டும் என்பதைக் கூற விரும்புகிறேன்; ஆனால், சட்டம் இயற்றுதல் — நிதித்துறை — பொருளாதார முன்னேற்றத்துக்குத் திட்டமிடுவது ஆகியவற்றில் அதிகாரப் பரவல் இருக்கவேண்டும்.

குடியரசுத் தலைவர் ஆட்சி எந்நிலையில்?

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவுகளை அனுப்பலாம் என்ற அரசியல் சட்டம் கூறுகிறது; இவ்விதம் உத்தரவுகளைப் போடும் முறைகளுக்குப் பதில் ஆலோசனைகளும் — பேச்சுவார்த்தைகளும் நடத்தும் ஏற்பாடும் இருக்கவேண்டும்.

ஒரு மாகலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைச் செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில், ஒரு மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முற்றிலுமாக முறிந்தால் அல்லது அந்த அரசினால் சட்டம் — ஒழுங்கு முறையைச் சரிவரச் செயல்படுத்த முடியாமல் போனால்தான் குடியரசுத் தலைவர் ஆட்சியைச் செயல்படுத்துவது குறித்து குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அறிக்கை அனுப்ப வேண்டும்.

இந்தப் பழக்கம் என்றும் கூடாது

மாநிலங்களின் முதல்வர்களாக இருப்பவர்களை மத்திய அமைச்சர்களாக நியமிக்கும் வழக்கம் கூடாது; இப்படிச் செய்யும் போது மத்திய அமைச்சர் பதவியை ஏற்கின்ற மாநில முதல்வர்கள் தங்கள் மாநிலத்தில் அதிகாரச் செல்வாக்கை இழக்காமல் இருக்கத் தங்களுக்கு வேண்டியவர்களை மாநிலங்களில் அமைச்சர்களாக்குவதில் ஈடுபடுகின்றனர்; இதனால் கோஷ்டிப் பூசல்கள் ஏற்படுகின்றன.

ஆளுநர் நியமனம்— மாறுதல் தேவை

ஆளுநர்களின் நியமன முறையில் மாறுதல் செய்யப்பட வேண்டும்.

சட்டமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறவரே நியமிக்கப்பட வேண்டும்.

சட்டமன்றம் முதலில் 3 அல்லது 4 பேருடைய பெயர்களைத் தெரிவிக்க வேண்டும்; பின்னர் கட்சித் தலைவர்கள், இந்த 3 அல்லது 4 பேரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க — அவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும்.

எப்படிச் செயல்படுவது?

மாநில ஆளுநர்கள் எப்படிச் செயல்படவேண்டும் என்பது பற்றி நடைமுறை கோட்பாடு பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்; அதைப் பின்பற்றாத ஆளுநர் வரம்புமீறி நடந்து கொண்டதாகக் கருதப்பட வேண்டும்.

ஆளுநர், முதலமைச்சரைத் தனது மாளிகையில் தேர்ந்தெடுக்கக்கூடாது; அவர், சட்டமன்ற வாக்கெடுப்பை வைத்துத்தான் முதல்வரை நியமிக்க வேண்டும்.

ஆளுநர் இன்று மத்திய அரசில் உள்ள கட்சியின் ஏஜெண்டாக இருக்கிறார்; அவர் எதிர் எதிரான கட்சிகளுக்கு இடையே நடுநிலையாக இருந்து செயல்பட வேண்டும்."

பத்திரிகைப் புரட்டு— பம்பாய் தி. மு. க. கண்டனம்

"பம்பாய் தி.மு.க. பிரமுகர்கள் வீடுகளில் மத்திய புலனாய்வுத் துறையினர் சோதனை நடத்தியதாகவும், தமிழக அரசு ஹெலிகாப்டர் வாங்கியதில் பெரும் ஊழல் என்றும் புரட்டுச் செய்தியை வெளியிட்ட ஒரு ஏடு, மறுநாளும் இங்குள்ள ஒரு பத்திரிகையில் செய்தி வந்ததாக ஒரு புளுகுச் செய்தியை வெளியிட்டிருக்கிறது; ஏதோ ஒரு பிளாஸ்டிக் தொழிலதிபர் இவ்விவகாரத்தில் ஈடுபட்டதாகச் சம்பைக் கட்டுக் கட்டிச் செய்தியினை வெளியிட்டிருக்கிறது அந்த ஏடு!

இந்த ஏட்டில் குறிப்பிட்டிருப்பது போல் எந்த தி.மு.க. பிரமுகர் வீட்டிலும் மத்திய புலனாய்த்துறை சோதனையிடவில்லை; இச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

இந்தச் செய்தியை வெளியிட்டு பம்பாய் தி. மு. கழகத்தினர்மீது மாசு கற்பிக்க முயலும் 'அலை ஓசை'யின் செயலை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்" என்று பம்பாய் தி.மு.க. செயலாளர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

திண்டுக்கல் 19-வது வட்ட நகர மன்ற உறுப்பினர் என். கோவிந்தராசு அறிவிப்பதாவது:—

"18—10—72-ல் 'தீக்கதிர்' என்னும் இதழில் வெளிவந்த செய்தியில், எனக்கும் — நகர் மன்றத் தலைவர் பொன். சீனிவாசன் அவர்களுக்கும் கொடியேற்றுவதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக வெளிவந்த செய்தி அப்பட்டமான பொய் ஆகும்.

என்னுடைய கொடி கருப்பு — சிவப்பு இருவண்ணக்கொடிதான்; எனது சின்னம் உதயசூரியன்தான்.

பொய்ச் செய்தி வெளியிட்டு வயிறு வளர்க்கும் 'தீக்கதிர்' இனிமேலாவது திருந்திக்கொள்ளும் என நம்புகிறேன்."

மானமுள்ள தமிழ் இனமே — எண்ணிப்பார்

அண்ணாவின் 'ஆவி' இன்று ஆட்சி நடத்துகிறது

அந்த ஆவியின் 'ஆசி'யை துரோகிகள் பெறமுடியாது

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் எழுச்சி முரசம்

சென்னை, நவ. 10—

"ஆச்சாரியா கிருபளானியால் — ஜெயப் பிரகாஷ் நாராயணனால்—இராஜாஜியால் — கம்யூனிஸ்டுகளால் செய்ய முடியாத காரியத்தை—ஆட்சிப் பீடத்திலிருந்து காங்கிரசை அகற்றிய காரியத்தை செய்த ஒரே மனிதர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்! அவர் அமைத்து விட்டுப்போன இந்த ஆட்சியை அழியாமல் பாதுகாக்க வேண்டும்! இந்த ஆட்சிக்குத் துரோகம் செய்தால், அது அண்ணாவின் ஆவிக்கு செய்யும் துரோகமாகும்!

"இது, கலைஞர் ஆட்சி அல்ல — நாவலர் ஆட்சி அல்ல— அண்ணாவின் ஆவி செலுத்தும் ஆட்சி! அண்ணா மறைந்த பிறகும் அவரால் வளர்த்தவர்கள் சோடை போய்விடவில்லை! இந்த ஆட்சியை எதிர்ப்பவர்கள் அண்ணா ஆவியின் ஆசியைப் பெற முடியாது"

என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், கோபாலபுரத்தில் இளைஞர் மன்றத்தின் சார்பில் நடந்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"கலைஞரின் மதிப்பைக் குறைக்க வேண்டும் — நாவலரின் மதிப்பைக் குறைக்க வேண்டும் — கழகத்தின் மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள்கூட அண்ணாவின் பெயர் சொல்லித்தான் குறை கூற வேண்டியிருக்கிறது; தங்கள் பெயரைச் சொல்லி அப்படிச் செய்ய முடியவில்லை.

ஒரு புதிய கட்சி தொடங்குவது என்பது சாதாரணமானதல்ல; சுதந்தரத்துக்குப் பிறகு, 'காங்கிரசைக் கலைத்துவிடுங்கள்' என்று காந்திஜியே சொல்லியும் கூட கலைக்காமல், அதனையே அரசியல் கட்சியாக நடத்தினார் பண்டித நேரு; அவருக்கே அந்த அச்சம் இருந்தது; கட்சி தொடங்குவது சில சமயம் கட்சி தொடங்குபவருக்கே கெடுதலாக முடியும்.

அண்ணா அவர்கள் பெரியாரைப் பிரிந்து எதிர்வாதம் தொடங்கியதற்கும் — புதிய கட்சி தொடங்கியதற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் எதிர்த்து வாதாடினார்; தி. மு. கழகம் என்று தொடங்கிய மறுவினாடியே பெரியாரை எதிர்த்துப் பேசவில்லை — எழுதவில்லை; உண்மையான எதிரிகள் யாரோ அவர்களை எதிர்த்துப் போராடினார்.

"காங்கிரசாரைப் பொறுத்தவரையில், தி. க.-வும் — தி. மு. க.-வும் இரட்டைக் குழல் துப்பாக்கிதான்" என்றார்; அப்படிச் சொன்ன ஒரே தலைவர் அண்ணாதான்!

ஒரு கட்சியிலிருந்து பிரிகிறவர்கள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கம் அண்ணாவிடம் இருந்தது.

தன்னளவில் மட்டுமல்ல — தன் தம்பிமாரைப் படைப்பதிலும் அண்ணா அறிவாளியாக இருந்தார் என்று தெரிகிறது.

'சட்டசபையைக் கூட்டு' என்றார்கள்; ஒப்புக்கொண்டு தேதியும் நிர்ணயித்தாகிவிட்டது; நாடாளுமன்ற சனநாயகத்தில் நம்பிக்கை இருந்தால் இந்த யோக்கியர்கள், ஆர்ப்பாட்டத்தை நிறுத்திவிட்டு சட்டசபைக்கு வந்து வாதிட வேண்டும்; அப்படிச் செய்யாதது, கலகக்கார சனநாயகமாகும். சட்டசபை கூடும் தேதி தெரிந்த பிறகு டெல்லிக்கு ஏன் மனுக் கொடுக்க வேண்டும்?

வெளியே இலஞ்சக் குற்றச்சாட்டு சொன்னால் வழக்குப் போடுவார்கள்; சட்டமன்றத்தில் சொல்ல உரிமை உண்டு; வந்து சொல்லட்டும்— அது பத்திரிகையில் வருவதற்கும் வாய்ப்பு உண்டு; இப்போது குடியரசுத் தலைவரிடம் கொடுத்த மனு விவரத்தைப் பத்திரிகையில் வெளியிட முடியவில்லை; காரணம் — பத்திரிகைகளில் வெளியிட முடியாத அளவுக்கு பொய்க் குற்றச்சாட்டாக இருக்கக்கூடும்.

சட்டமன்றத்தைக் கூட்டச் சொன்னது கம்யூனிஸ்டுக் கட்சி; இப்பொழுது 'அமைச்சர்களை உள்ளே விடாமல் 'கேரோ' செய்வோம்' என்கிறார்கள்; அரசியல் தெரிந்தவர்கள் இப்படிச் சொல்வார்களா? சட்டசபையை எதற்குக் கூட்டச் சொன்னார்கள் — 'கேரோ' செய்யவா?

பொதுமக்கள் கருத்து பற்றி; அவர்களுக்குக் கவலை இல்லை; பத்திரிகையில் செய்தி வர வேண்டும் — அவ்வளவுதான்!

ஆர்ப்பாட்டம் என்றால் என்ன — ஓர் இடத்தில்கூடி கருத்து வெளியிடுவதுதான் ஆர்ப்பாட்டம்.

குடியரசுத் தலைவரிடம் விண்ணப்பம் கொடுத்த கட்சிக்குக் 'கேரோ' செய்யும் உரிமை எங்கே இருந்து வந்தது?

'இலஞ்சக் குற்றச்சாட்டு' என்று சொல்லி மனுக் கொடுத்ததெல்லாம் சாகசம்; அப்படியெல்லாம் மத்திய அரசு, அந்தக் குற்றச்சாட்டின்மீது ஒரு மாநில அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்துவிட முடியாது.

கலைஞருக்கும்—நாவலருக்கும் இது ஒரு மாகாணம்; இந்தியாவில் 20 மாகாணங்கள் உள்ளன; இங்கே இப்படிச் செய்தவர்கள் நாளை அங்கேயும் செய்யத் தொடங்கிவிட்டால்...? எனவே, இது விண்ணப்பம் அல்ல — மண்ணப்பம்.

இந்திரா காந்தி, அறிவில் அப்படி ஒன்றும் சொற்பமானவர் என்று நினைக்கவில்லை; அரியானா முதலமைச்சர் பன்சிலால்மீது இதே குற்றச்சாட்டு வந்த போதும் அவர் அசையவில்லை!

கொள்கை ரீதியாக எந்தக் கட்சியும் எதிர்க்க முடியாத தார்மீக வெற்றியை கலைஞர் அரசு வானளாவப் பறக்க விட்டிருக்கிறது; ஆனால், பொறாமை ஒவ்வொரு மனிதரிடமும் உள்ளது; உடன் பிறந்தாரிடையேகூட அது உள்ளது; தூண்டிவிட்டால் அது இன்னும் வேலை செய்யும்.

பணக்காரன் மேலும் பணம் சேர்த்தால்—வசதி சேர்த்தால்— அது தெரியாது. ஒரு ஏழை எம். எல்.ஏ. ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினால் 'பேரான்பார்— பேரான் பார்' என்பார்கள்! ஏழைகளுக்கே வந்த சாபம் இது!

ஸ்கூட்டர் தொப்பி வழக்கு போன்ற மூன்று வழக்குகளில் கலைஞர் மீது எந்தக் குற்றமும் நிருபிக்க முடியவில்லை! நாவலர் அழைத்தார் நீதிமன்றத்துக்கு — வரவில்லை!

இன்று தி. மு. கழகத்தை — கழக அரசை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகள், அன்று காமராசர் பதவியில் இருந்தபோது, 'ஐதராபாத் பாங்கியில் ஒருகோடி ரூபாய் போட்டு வைத்திருக்கிறார்' என்று சொன்னபோது, தி. மு. கழகம் அதனைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை!

பக்தவத்சலத்தை, 'பத்து இலட்சம் பக்தவத்சலம்' என்று 'கல்கி' எழுதியபோது, அதனைக் கழகம் பயன்படுத்திக்கொள்ளவில்லை! மெய்ப்பிக்க முடியாதவைகளை கடைபிடிப்பது முறையல்ல — என்றே தி.மு. கழகம் கருதியது!

இது மாகாண ஆட்சி அல்ல — தமிழன் ஆட்சி; பீகாரில் இந்திக்காரன் ஆட்சி கவிழ்ந்தால் உ.பி.யில் இந்திக்காரன் ஆட்சி உண்டு; உ.பி.-யில் கவிழ்ந்தால் ம.பி.-யில் உண்டு!

மானமுள்ள தமிழ் இனமே — நீ வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும், உனக்கு இருப்பது இந்த மாநிலம் ஒன்றுதான்!

இந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவால் மாநில சுயாட்சி பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது!

தமிழ்நாட்டின் நலனுக்காக டெல்லியில் வாதாடுவது நமது முதல்வர்தான்; இந்த மாகாணத்தில் வந்த முதல்வர்களிலேயே சரித்திரத்தில் நிலைத்து நிற்கப் போகிறவர் கலைஞர் கருணாநிதிதான்!

தமிழன் என்ற மான உணர்ச்சி ஒன்றை மட்டும் வைத்துச் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்."

எதிர்க் கட்சிகளின் கைப்பாவை— ஆட்டி வைத்தபடி ஆடுகிறது!

ஈரோடு, நவ. 8—

"எம். ஜி. ஆருக்கு பின்னால் பதவி இழந்த ஆதிக்கவாதிகள் இருக்கிறார்கள்; பதவி இழந்த ஆத்திரத்தில் அவர்கள் எம். ஜி. ஆரை ஆதரிக்கிறார்கள்; எம். ஜி. ஆரும் அவர்கள் சொற்படிதான் நடக்கிறார் — எதிர்க் கட்சிகளின் கைப் பொம்மையாகிவிட்டார், எனவே, இந்த நேரத்தில் கழகத் தொண்டர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்"

என்று அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், ஈரோடு நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழகத் தலைவர்கள் எதேச்சையாக என்னைக் கட்சியிலிருந்து நீக்கி விட்டார்கள் என்று எம். ஜி. ஆர். பேசி வருகிறார்; இது தவறானதாகும். பொதுக்குழு[illegible] இந்தப் பிரச்சினை வந்தபோது, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் 'எம். ஜி. ஆரை சஸ்பெண்டு செய்வதற்குப் பதில், கட்சியிலிருந்தே அவரை 'டிஸ்மிஸ்' செய்திருக்க வேண்டும்' என்று ஒருமனதாகக் கூறினர்.

சாதாரண கழகத் தொண்டர்கள் மனம் புண்படும் அளவில்தான் எம். ஜி. ஆர். நடவடிக்கை இருந்தது."

மற்றும் மு. சின்னசாமி எம்.எல்.ஏ., பி. ஏ. சாமிநாதன் எம்.பி., எம். தண்டபாணி எம்.பி., மாவட்டச் செயலாளர் இராசமாணிக்கம் எம்.எல்.சி., மா. சுப்பிரம[illegible] எம்.[illegible].ஏ. ஆகியோ[illegible]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]வர்கள் கேட்க -- இவர்கள் [illegible]நவரை ஒருவர் பார்த்து [illegible]ழித்துவிட்டு, 'விவசாயிக[illegible] போனசு கொடுப்பது — விவசாயிகளுக்கு எட்டு மணி நேர வேலை' என்று ஏதேதோ 'விட்டிருக்கிறார்'கள்!

[illegible]தியாளர்கள் விடவில்லை; [illegible] திட்டங்கள் -- நாங்கள் கொள்கையைக் கேட்கிறோம்' என்று கேட்க 'மது விலக்கு' என்று சொல்லியிருக்கிறார்கள்; 'அது காந்தியார் கொள்கையாயிற்றே' என்று [illegible]ரூர்கள் கூற, மறுபடியும் [illegible]ழிக்க -- அந்த ஊரில் சிரிப்[illegible]ச் சிரிக்கவைத்துவிட்டு [illegible]திருக்கிறார்கள் அவர்கள்!

[illegible]ந்தப் 'புரட்டர்'களை [illegible]வர் நம்புவர்?

மதுவிலக்கைப் பற்றிப் பேசுகின்ற எம். ஜி. ஆர். கட்சியின் பொருளாளர், நான் முன்பெல்லாம் குடித்தேன் -- இப்போது குடிப்பதில்லை' என்று வாக்குமூலம் தந்திருக்கிறார்!

எம். ஜி. ஆர். கூட, 'நான் முன்பெல்லாம் கறுப்பும் பணம் வாங்கினேன் -- இப்போது வாங்குவதில்லை' என்று சொல்லியிருக்கிறார்; இவர்களையெல்லாம் யார் நம்புவது?

ஆட்சியைக் கவிழ்க்க இதுதான் வழி என்றார்--

எந்த அரசு வந்தாலும் கல்வீச்சு நடத்துவது -- பஸ்களை எரிப்பது என்றால் தமிழகத்தின் நிலைதான் என்ன? 'ஆட்சியைக் கவிழ்க்க இதுதான் வழி' என்றால், எந்த அரசு வந்தாலும் அதைச் செய்யலாமே!

'சீச்சீ--இந்தப் பழம் புளிக்கும்' என்கிறார் 'வாத்தியார்'!

"தி.மு.க. அரசியல் கட்சியாக இல்லாதபோது 1953 ல் நான் அக்கட்சிக்கு வந்தவன்! அன்பழகன் 1957 ல் தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பேராசிரியர் பதவியை விட்டுவிட்டு வந்தவர்; நான் அவரை, 'படித்தவர்--பண்பாளர்' என்று எண்ணியிருந்தேன்; பதவிக்காக வந்தவர் என்னைப் பற்றிக் கூறுகிறாரே--மந்திரிப் பதவி கேட்டேன்' என்று!"

—புரட்டு நடிகரின் மாலை நேரப் பேச்சு

ஆமாம் 'வாத்தியாரே--ஆமாம்; அன்பழகனுக்கு முன்பே நீர் கட்சிக்கு வந்துவிட்டீர்; உமது மேடைப் பிரசங்கத்தைக் கேட்டும்--உமது சினிமாப் படத்தைப் பார்த்தும்தான் அன்பழகன் கட்சிக்கு வந்தார்; அன்பழகன் பேச்சைக் கேட்டுவிட்டுக் கட்சிக்கு வந்தவரல்லர் நீர்; இது உண்மை--உண்மை--உண்மை! இதுதான் உண்மை!

பேரறிஞர் அண்ணாவுக்கு இது புரியவில்லை; போயும் போயும், உம்மைப்போன்ற பழம்பெரும் கட்சிக்காரர்களெல்லாம் இருக்க--அன்பழகனை இராஜிநாமா செய்துவிட்டுத் தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டிருக்கிறார்!

அன்பழகனைப் போன்ற புதிய ஆட்களெல்லாம் கட்சிக்குள் வந்ததால்தான், கட்சி கெட்டுவிட்டது; எனவே, உம்மைப் போன்ற பழம்பெரும் ஆட்களெல்லாம் கழகத்தை விட்டு விலகிப் போய்விட்டதே நல்லது; இல்லையென்றால், பேராசிரியர் அன்பழகனைப் போன்ற புதிய ஆட்கள் உங்களையெல்லாம் கெடுத்துவிடுவார்கள்!

அன்பழகன் படித்தவர் அல்லர்--பண்பாளர் அல்லர்--பதவிக்காகக் கட்சிக்கு வந்தவர் என்பதைப் புரிந்துகொண்டு நாட்டுக்கு அறிவித்திருக்கும் நல்லவரே--வல்லவரே--நீர் 'வாழ்க!'

இப்பொழுது கழகத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான தோழர்கள், பேராசிரியர் அன்பழகனின் மாணவர்களாக இருந்தவர்கள்தான்! பேராசிரியர் பேச்சைக் கேட்டுக் கட்சிக்காரர்களாக மாறியவர்கள்தான்!

'பேராசிரியர் படித்தவரல்லர்--பண்பாளர் அல்லர்' என்று நீர் கூறிவிட்ட பிறகு, பேராசிரியர் பேச்சைக் கேட்டுக் கட்சிக்கு வந்தவர்கள் எப்படியிருப்பார்கள்?

வேண்டாம் உமக்கு இந்தக் கழகத்தின் சங்காத்தம்! சமுதாயச் சீர்திருத்தக் கட்சியாக இருந்த கட்சி அரசியல் கட்சியாக மாறியவுடனேயே நீர் இதைவிட்டுப் போயிருக்கலாம்!

இப்போதாவது, 'சீச்சீ--இந்தப் பழம் புளிக்கும்' என்று கூறினீரே--இதற்காக உமக்கு இமாலயப் பாராட்டு உரித்தாகுக!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அமைச்சர் என். வி. என். மணிவிழா

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும் – தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான என். வி. நடராசன் அவர்களின் மணிவிழா

12--11--72 ஞாயிறு மாலை 6-மணிக்கு

சென்னை -- அண்ணாசாலை தி. மு. க. அறக்கட்டளை

அண்ணா அறிவாலயத்தில்

(ஆபட்ஸ்பரி அருகில்) நடைபெறும்

விழாத் தலைவர்:

தந்தை பெரியார்

மணிவிழாக் கேடயம் வழங்குபவர்:

முதல்வர் கலைஞர்

பொன்னாடை போர்த்துபவர்:

அமைச்சர் நாவலர்

மலர் வெளியிடுபவர்:

அமைச்சர் க. அன்பழகன்

வாழ்த்து இதழ் வழங்குபவர்:

அமைச்சர் சத்தியவாணிமுத்து

நன்றியுரை:

மதுரை மேயர் எஸ். முத்து

வாழ்த்துரை வழங்குவோர்:

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்
சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
அப்துல் வகாப் எம்.எல்.சி.
ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.சி.
கவிஞர் கண்ணதாசன்
எஸ். எஸ். இராமசாமி படையாச்சி

மற்றும் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சேலத்தில் விமான நிலையம்

சேலத்தில் விமான நிலையம் அமைக்க இரண்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன; இவ்விரண்டு இடங்களிலும் இன்னும் சில மாதங்களில் 'சர்வே' நடத்தப்படும்; அதுபோது, எது சிறந்த இடம் என்பது பற்றி முடிவு செய்யப்பட்டு -- அந்த இடத்தில் விமான நிலையம் அமைக்கப்படும்.

சேலத்தில் விமான நிலையம் அமைக்கும் பணியை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே தொடங்குவது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்துவருகிறது.

நெல்லை மாவட்ட

தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

நெல்லை மாவட்ட தி. மு. க. கூட்டம் 12—11—72 அன்று பாளையங்கோட்டை மகாராசநகர் திருமண மண்டபத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் எம். பி. அழகியநம்பி கேட்டுக் கொள்கிறார்.

சர்க்கரை விலை உயருகிறது

டெல்லி அறிவிப்பு

புதுடில்லி, நவ. 10—

'லெவி' சாக்கரையின் ஆலை வாயில் விலையில், கிலோவுக்கு 10 காசு உயர்வை மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

இந்தப் புதிய விலை, 1972 டிசம்பர் 1-ம் நாள்முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதனால், நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் 'லெவி' சர்க்கரையின் விலை கூடுதலாகும்.

தற்போது நாடு முழுவதிலும் ஒரே மாதிரியாக 'லெவி' சர்க்கரை ரூ 2-க்கு விற்கப்பட்டுவருகிறது.

"காப்பு வரிக் கமிஷனின் பரிந்துரைகள் கிடைத்த பிறகு அவசிய மானால் விலை பற்றி மறுபரிசீலனை செய்யப்படும்; அதுவரையில் இந்தப் புதிய விலை நீடிக்கும்" என்று உத்தரவு தெளிவுபடுத்துகிறது.

இந்த 20 காசு அதிகரிப்பில் 14 காசு -- சர்க்கரையின் குறைந்தபட்ச விலை அக்டோபர் 1-ந் தேதி முதல் உயர்த்தப்பட்டிருப்பதைச் சரிக்கட்டவும், எஞ்சிய 6 காசு -- குறைந்தபட்ச போனசு 4 சதவிகிதத்திலிருந்து 8.33 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டிருப்பதையும், மற்றும் பாங்கி வட்டி விகித அதிகரிப்பையும் சரிக்கட்டவுமேயாகும்" என்று கூறப்படுகிறது.

புரட்டுத்தலைவரின் நிலை தடுமாற்றம்

★

"மக்களை அராஜகத்துக்கு நான் தூண்டிவிடுவதாகக் கருணாநிதி கூறுகிறார்; என்றாவது மாணவர்களை, 'போராட்டத்துக்கு வாருங்கள்' என்று நான் கூப்பிட்டது உண்டா? என்றாவது மாணவர்களை, 'கல்லூரிக்கும் போக வேண்டாம்' என்று கூறியது உண்டா?!!

—புதுக் கட்சித் தலைவரின் கோடம்பாக்கம் பேச்சு

புரட்சித் தலைவரே -- நீர் அசல் 'புரட்சி'த் தலைவர்தான்! இல்லையென்றால், இவ்வளவு துணிந்து இப்படிப்பட்ட பொய்[illegible] கூறுவீரா?

'பத்தாந் தேதி ஊர்வலத்துக்கு உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரையுள்ள எல்லா மாணவர்களும் வந்து கலந்துகொள்ள வேண்டும்' என்று கட்டளையிடும் முறையில் அறிக்கை விடுத்துவிட்டு, நான் மாணவர்களைக் கூப்பிடவில்லை' என்கிறீரே!

பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்த இரண்டு மணி நேரத்துக்குள் இந்த தடுமாற்றமா?

நீர் இப்படிக் கோடம்பாக்கத்தில் பேசிக்கொண்டிருந்தபோதே கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தினர் கையில் இருந்த பத்திரிகைகளில் உமது அறிக்கை வந்திருந்ததே -- அதையும் படித்துவிட்டுதான் உமது பேச்சையும் கேட்டிருக்கிறார்கள்; அவர்களெல்லாம் உம்மைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டு கலைந்து சென்றார்களோ!

மாலைப் பத்திரிகையில் வந்த அறிக்கையில் மாணவர்கட்கு அழைப்பு -- அதே நாள் இரவு நடைபெற்ற கூட்டத்தில், 'நான் மாணவர்களை எங்கே கூப்பிட்டேன்' என்ற கேள்வியா?

'நான் மாணவர்களைப் போராட்டத்துக்கு அழைக்கவில்லை -- ஊர்வலத்துக்குத்தானே அழைத்தேன்' என்று கூறி நீர் மழுப்பக்கூடும்.

நீர் நடத்துவது வெறும் ஊர்வலமா -- போராட்டத்தி[illegible] ஒரு கட்டம்தானே அந்த ஊர்வலம்? அப்படியே, 'இல்[illegible]' என்று வாதிட்டாலும், அரசியல் ஊர்வலம்தானே! மா[illegible]வர்களை -- அதுவும் பள்ளி நடக்கும் காலத்தில், ஊர்வலத்து[illegible] வாருங்கள்' என்று அழைக்கலாமா?

அவர்கள் தங்கள் படிப்பைக் கெடுத்துக்கொண்டு உமது ஊர்வலத்தில் பங்கு கொண்டு உமக்கு 'ஜே' போட வேண்டுமோ?

தூத்துக்குடி உரத் தொழிற்சாலை

பிரிட்டன் தரும் கடன் மூலம் பயன்பெறும்

புதுடில்லி, நவ. 10—

இந்தியாவும் -- பிரிட்டனும் கையெழுத்திட்டிருக்கின்ற ரூ. 30.35 கோடி கடனுதவி ஒப்பந்தத்தின் மூலம் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை -- மங்களூர் உரத் தொழிற்சாலைத் திட்டங்கள் பயனடையக்கூடும்.

'மூலவ'ருக்குப் பின்னால் உள்ள 'அவர்கள்' யார்?

"நான் கைது செய்யப்பட்டால்--எனக்குப் பின்னால் இருக்கிற முன்னணி வீரர்கள் சிறையில் தள்ளப்பட்டால் -- மக்களே இந்த இயக்கத்தை நடத்துவார்கள்!"

—புதுக் கட்சி மூலவர்

முன்னணி வீரர்கள் யார் யார் என்ற பட்டியலை நீர் வெளியிட்டால் வசதியாக இருக்கும்; இல்லையென்றால், 'ஒரிஜினல் முன்னணி வீரர்கள்' அனைவரும் சிறைக்குப் போய்விட்ட பிறகு, உம்மால் உருவாக்கி விடப்பட்டிருக்கும் 'பின்னணி வீரர்'கள் வந்து உட்கார்ந்துகொண்டு, நாங்கள்தான் 'முன்னணி வீரர்கள்' என்று கூறி கட்சி நடத்த ஆரம்பித்துவிடுவார்கள்; அப்புறம் நீர் சொல்லும் 'மக்கள்' 'கதி' என்ன ஆவது?

'மக்கள்' பட்டியலில் யார் யாரைச் சேர்க்கக்கூடாது என்பதையும் இப்போதே சொல்லிவிட்டால் நல்லது; உமது கட்சியைச் சேராதவர்களும் தங்களை 'மக்கள்' என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள்!

எனவே, 'மக்கள் எனப்படுவோர் என்னை ஆதரிக்கும் என் கட்சிக்காரர்கள் மட்டுமே ஆவார்கள்; என்னை ஆதரிக்காத -- என் கட்சியல்லாதவர்களெல்லாம் மக்கள் அல்லர்' என்று திட்டவட்டமாக அறிவித்துவிடவேண்டும்.

நாட்டில் 'தி.மு.க.' என்றும், 'சிண்டிகேட்' என்றும், 'சுதந்தரா' என்றும் சோஷலிஸ்ட்' என்றும் எத்தனையோ கட்சிகள் உள்ளன; அந்தக் கட்சிக்காரர்களெல்லாம் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்! புதுக் கட்சித் தலைவரை ஆதரிப்பவர்கள் மட்டுமே 'மக்கள்' என்பதை இனியாகிலும் நாடு உணர்ந்து கொள்ளட்டும்!

வனஸ்பதி விலையும் உயர்வு

நாட்டில் எல்லாப் பகுதிகளிலும், வனஸ்பதியின் விலையில் கிலோவுக்கு 10 காசு உயர்வையும் மத்திய அரசு அறிவித்திருக்கிறது; இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

"அண்மை வாரங்களில் வேர்க்கடலையின் விலை மேலும் உயர்ந்திருப்பதைக் கருதி வனஸ்பதி விலை உயர்த்தப்படுகிறது" என்று அரசு அறிவிப்புக் கூறுகிறது.

தென் பகுதியில் வனஸ்பதி சில்லறை விலை கிலோ ரூ 5.64-க்கு விற்கப்படும்; 2 கிலோ ரூ. 12.87-க்கு விற்கப்படும்.

கடந்த 4½ மாதங்களில் ஐந்து முறை விலை உயர்த்தப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; [illegible]

இந்து வெளியிடப்படுகிறது.